விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 270 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 30 திங்கட்கிழமை (15.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI. 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807



## தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவு

### நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பமாகின்றது.

இதன்பிரகாரம்15.09.2025 இன்று காலை 9.30 மணிக்கு தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

16ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா பொதுச் சபை அமர்வில் ஜனாதிபதி அநுர பங்கேற்பார்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இம்மாதம் 22 ஆம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி ஏனைய நாட்டுத்தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை

15ஆம் பக்கம் பார்க்க

# படையினரைப் பாதுகாக்க அருண ஜயசேகர சூழ்ச்சி

### தமிழ்த் தரப்புகள் காட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் எந்தவிதமான போர்க்குற்றங்களும் இடம்பெறவில்லை எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்த கருத்து பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன் உள்ளக விசாரணைகளால் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிட்டாது என்ற கருத்தினையும் வலுப்பெறச் செய்துள்ளது. இந்நிலையில் பிரதியமைச்சரின் குறித்த கருத்துக்களுக்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து கடும் எதிர்ப்புகளும் எழுந்துள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கற்கோவளத்தில் அடாவடியில் ஈடுபட்ட நால்வர் கைது

### மேலும் நால்வருக்கு வலைவீச்சு

(பருத்தித்துறை)

கற்கோவளம் பகுதியில் உள்ள மீனவ வாடிகள் எரிக்கப்பட்டமை மற்றும் கற்கோவளம் மீனவர் சங்கத் தலைவர் உட்பட இரண்டு கடற்றொழிலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாரால் நால்

15ஆம் பக்கம் பார்க்க

## பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தல்

### ஆராய்கின்றது அரசு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை, பழைய முறையில் நடத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

முன்னதாக எல்லை நிர்

16ஆம் பக்கம் பார்க்க

### சீனத் தூதுவரை அடுத்து

## ரணிலைச் சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் இடையிலான சந்திப் பொன்று கொழும்பிலுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் வேண்டுகோளின் பேரில் இந்தச் சந்திப்பு நடைபெற

16ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தல் என்றதும் அரசாங்கம் அஞ்சுவது ஏன்?

### வினவுகிறது ஐக்கிய மக்கள் சக்தி



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலைக் கண்டு அரசாங்கம் எதற்காக அஞ்சுகிறது. இத்தேர்தல் நடத்தப்பட்டால், தேசிய மக்கள் சக்திக்கு மக்களாதரவு கிட்டாது என்பதாலா? எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

பெல்லன்வில ரஜமகா விகாரையின் விகாராதிபதியைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய

15ஆம் பக்கம் பார்க்க

## நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு

### 631 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் (13) நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரிலும் சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள்

15ஆம் பக்கம் பார்க்க

## சிறிநேசன் எம்.பி விபத்தில் காயம்

(மட்டக்களப்பு)

வாகன விபத்து ஒன்றில் படுகாயமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறிநேசன் பயணித்த வாகனம் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்

15ஆம் பக்கம் பார்க்க

## பெக்கோ சமனின் நெருங்கிய சகா கைது

(அம்பாந்தோட்டை)

பாதாள உலகக் குழுக்களை ஒடுக்கும் முயற்சியில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ள நிலையில், இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் பாதாள உலகக் குற்றவாளியான பெக்கோ சமனின் மற்றொரு நெருங்கிய கூட்டாளியும் நேற்று (14) கைது செய்யப்பட்டார்.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்



திருமதி. உதயந்தி கனகராஜா
(S.L.T.S - I) (B.F.A music, P.G.D.E)
வட இலங்கை சங்கீதசபை,
சங்கீத கலாவித்தகர்
(வாய்ப்பாட்டு, வீணை)
பகுதித்தலைவர் - இடைநிலைப்பிரிவு
(யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)

மண்ணின் மகத்துவமாய்
மனையாட்சி மிக்கவளாய்
கலைக்கு அரசியாய்
என்றென்றும் நோய் நொடியின்றி
பல்லாண்டுகாலம் வாழ்க.

**சேவைக் காலம்**

- 22.08.1994 – 31.12.1996
  யா/வட இந்து மகளிர் கல்லூரி
- 01.01.1997 – 01.01.1998
  யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
- 02.01.1998 – 30.06.2009
  யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
- 01.07.2009 – 16.01.2017
  யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
- 17.01.2017 – 15.08.2022
  யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
- 16.08.2022 – 15.09.2025
  யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்

Best Wishes!

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
(அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்)
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்

(5415)


# குழந்தை மருத்துவ விடுதி புதிய இடத்தில்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ விடுதி புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஐந்து வருடங்களாக விடுதி இலக்கம் 5 மற்றும் இலக்கம் 12 பிரிவுகளில் இயங்கி வந்த குழந்தை மருத்துவ விடுதி தற்போது இல.39 இல் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

வைத்தியசாலையில் விடுதிகள் மற்றும் சில விசேட சிகிச்சைப் பிரிவுகளுக்கான இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது.

மேலும் சில கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு விடுதிகள் திறக்கப்பட வேண்டும். அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ந-7)

# தேர்தல் ஆணைக்குழுவின் இணையவழிச் சேவை குறித்து நெடுந்தீவில் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் ஆணைக் குழுவின் இணையவழிச் சேவை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் மாணவர்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வின் ஓர் அங்கமாக நாளை காலை 9.30 மணியளவில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் நெடுந்தீவு பிரதேசத்தை மையப்படுத்தி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான செயலமர்வு நாளை காலை 11.30 மணியளவில் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ.சசீலன் தெரிவித்துள்ளார். (ந-7)


**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் கடை ஒன்றிற்கு சாரதி மற்றும் பொருட்களை விநியோகிப்பதற்குகள விநியோகஸ்தர் தேவை.

தொடர்புக்கு :
**077 392 3036**

(5417)



# 04 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் விஜயரத்தினம் புஸ்பலீலா [கலா]

மண்ணில் 03.06.1960
விண்ணில் 15.09.2021

கொடுங்கனவின் ஒரு அதிர்வில்
கண்விழித்துப் பார்க்கையிலே
அகல் விளக்கே நீயணைந்து
நான்காண்டு நகர்ந்ததிங்கே
நம் கனவு ஒவ்வொன்றாய்
உருப்பெற்று வருகையிலே
மின்னலென சென்று விட்டாய்
துயரில் எமை ஆழ்த்தி விட்டு
எம்மனையின் எல்லையெங்கும்
கனிவான உன் குரலின்
ஈரம் இன்னும் காயவில்லை
ஒளி சிந்தும் உன் வதனம்
நினைவிடுக்கில் நிலைத்திருந்து
உருவமிலாக் காற்றைப் போல
எமை தினமும் வழி நடத்தும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"புஸ்பநிவாஸ்"
[illegible]லையடி,
[illegible]ய்.

கணவன், பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(1551)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்படவுள்ள மகிந்தவின் செயலர்



**(கொழும்பு)**

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் செயலாளராகப் பணியாற்றிய லலித் வீரதுங்கவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களம் வாக்குமூலம் பதிவுசெய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.**

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் விளையாட்டுத்துறை அமைச்சுக்காக வரி இல்லாத அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட பேருந்தொன்று, கார்ல்டன் பாலர் பாடசாலைக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி குறித்த குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணைகளைக் குற்றப்புலனாய்வு திணைக்களம் தற்போது ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அக்காலத்தில் ஜனாதிபதி செயலாளர் திணைக்களத்தில் பணியாற்றிய மேலதிக செயலாளரும் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளார். (நி)

## தங்க பிஸ்கட்களுடன் ஊழியர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய ஊழியர் ஒருவர் தங்க பிஸ்கட்களை கடத்த முயன்றபோது கைது செய்யப்பட்டதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் 54 வயதான ஊழியர் ஒருவர் ஆவார்.

அவரது காலுறையினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 210 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான 5.94 கிலோக்கிராம் எடையுள்ள 24 கரட் தங்க பிஸ்கட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## நீண்டதூரம் பயணிக்கும் பேருந்துகள்

# 48 மணிநேரத்திற்கு முன் தகுதிச் சான்றிதழ் பெற வேண்டும்

## திட்டமிடும் அரசாங்கம்

(கொழும்பு)

தொலைதூரம் பயணிக்கும் பேருந்துகள் அனைத்தும் இயக்கத் தொடங்குவதற்கு முன்பு அடிப்படை தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதை கட்டாயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து இதைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட தூர சுற்றுலா பேருந்துகளும் இந்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

மேலும் இந்த தர பரிசோதனை இல்லாமல் எந்த நீண்ட தூர சுற்றுலா பேருந்துகளும் அங்கீகரிக்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 கிலோமீற்றருக்கு மேல் பயணிக்கும் பேருந்துகள் அவற்றின் இயக்கம் தொடங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு தகுதிச் சான்றிதழ் பெற வேண்டும்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தற்போது ஒரு சுற்றறிக்கை மூலம் இதற்குத் தேவையான வழிமுறைகளை வெளியிட நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த செயல்முறை நாடு முழுவதும் நீடிக்கப்படும் போது, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வாகன பழுது பார்க்கும் இடங்களை ஆய்வு செய்து, அதனுடன் தொடர்புடைய ஆய்வுகளை நடத்தி, தகுதிச் சான்றிதழை வழங்கும்.

அதன்படி, இந்த செயல் முறையை நாடு முழுவதும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# உரிய காலப்பகுதியில் முக்கிய பரீட்சைகள்

## கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகளை உரிய காலப்பகுதியில் நடத்துவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி 2026 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர் தர பரீட்சையை ஓகஸ்ட் மாதத்திலும், 2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சையை டிசம்பர் மாதத்திலும் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தர பரீட்சையை அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடத்துவதற்கு கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலை விடுமுறை, உரிய காலப்பகுதியில் வழங்கப்பட வேண்டும் என கல்வியமைச்சு வெளியிட்டுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ பாடசாலை கல்வித் தவணை அடங்கிய நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிக விலைக்கு அரிசி விற்றால் 5 லட்சம் வரை அபராதம்!

## நுகர்வோர் அதிகார சபை அதிரடி

(கொழும்பு)

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் ஒரு தனிப்பட்ட வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டால், அவருக்கு இரு இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரை அபராதம், அல்லது 5 மாத சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஒரு தனியார் நிறுவனம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், நீதிமன்றம் 5 இலட்சம் ரூபாய் முதல் 50 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அரிசி சேமிப்பு தொடர்பான குற்றத்திற்காக, நீதிமன்றம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தொடர்புடைய பொருட்களையும் பறிமுதல் செய்யலாம்.

மேலும் இரண்டாவது குற்றத்தில், நீதிமன்றம் குறைந்தபட்ச அபராதத்தின் இரு மடங்கு அபராதம் விதிக்கலாம் மற்றும் அந்த நபருக்கு ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கலாம் எனவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (நி)

# 25 சட்டவிரோத வாகனங்கள் தீவிரமாகும் விசாரணைகள்

## விரைவில் சிக்கவுள்ள பலர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக உரித்தாக்கப்பட்ட 25 வாகனங்கள் குறித்து மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைத் தொடங்கியுள்ளதுடன் பல சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற வாகனங்களை வைத்திருப்பவர்களில் பெரும்பாலான நபர்கள் அரசியலுடன் தொடர்புடையவர்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசாரணைகளின் போது பெறப்பட்ட சரிபார்க்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக பதிவு செய்தல் மற்றும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வாகனங்களை ஒன்று சேர்த்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நீதி அமைச்சின் சிறப்பு குழு ஜெனிவா விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வு கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் பங்கேற்பதற்காக நீதி அமைச்சின் சிறப்பு குழு ஜெனிவாவுக்கு செல்லவுள்ளது. இந்த குழுவில் நீதி அமைச்சர் ஹர்ஷன ராஜ கருணா மற்றும் பிரதி அமைச்சர் முனீர் மௌலவி உட்பட நீதி அமைச்சின் அதிகாரிகள் சிலர் உள்ளடங்குவதாக வெளி விவகார அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டதுடன், எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை இந்த விஜயம் திட்டமிட்டுள்ள போதிலும், அதற்கு முன்னர் பெரும்பாலும் நீதி அமைச்சின் சிறப்பு குழு ஜெனிவா செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தலைமையிலான குழு கடந்த திங்கட்கிழமை ஜெனிவா சென்று, இலங்கையின் நிலைப்பாட்டை அறிவித்ததன் பின்னர் நாடு திரும்பியுள்ள நிலையில், நீதி அமைச்சின் சிறப்பு குழு மீண்டும் ஜெனிவா செல்கிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய கிண்ண கிரிக்கெட்

# பங்களாதேஷை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த இலங்கை



ஆசிய கிண்ண ரி-20 தொடரின் குழு "பி" பிரிவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில், இலங்கை அணி பங்களாதேஷ் அணியை 6 விக்கெட்டுகளால் வீழ்த்தி தனது முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் அணி சார்பில் ஷமிம் ஹொசைன் அதிக பட்சமாக 42 ஓட்டங்களையும், ஜாக்கர் அலி ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் பந்து வீச்சில் வனிந்து ஹசரங்க அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

அதன்படி, 140 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 14.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டியது.

இலங்கை அணி சார்பில் பெத்தும் நிஸ்ஸங்க அதிகபட்சமாக 50 ஓட்டங்களையும், ஆட்டமிழக் காமல் துடுப்பெடுத்தாடிய கமில் மிஷார 46 ஓட்டங்களையும் பெற்றனர்.


பங்களாதேஷ் அணி சார்பில் மஹேதி ஹசன் அதிகபட்சமாக இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (3)


# தேசியமட்ட சம்மட்டி எறிதலில் வட மாகாண வீரர்கள் சாதனை

தேசிய மட்ட சேர் ஜோன் காபெற் மெய்வல்லுநர் போட்டியில் சம்மட்டி எறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் புதிய சாதனையைப் பதிவு செய்ததோடு, வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவன் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றி வட மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.


93 ஆவது தேசிய மட்ட சேர் ஜோன் காபெற் மெய்வல்லுநர் போட்டிகள் கொழுப்பு தியகம ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் அன்ரனி விமலதாஸ் நிதர்சன் 44.70 மீற்றர் தூரம் எறிந்து கனிஷ்ட பிரிவில் புதிய சாதனையைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தையும், வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவன் கிருஷ்ணமூர்த்தி சுபீஸ்கரன் 36.79 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (3-90)





# தேசியமட்ட யூடோ போட்டியில் முல்லைத்தீவு மாணவன் சாதனை



தேசிய யூடோ போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் தேறாங்கண்டல் அ. த. க. பாடசாலை வெண்கலப்பதக்கம் பெற்று முல்லைத்தீவு மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான தேசிய யூடோ போட்டி கொழும்பில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றிருந்தது. இப்போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட தேறாங்கன்டல் அ. த. க பாடசாலை மாணவன் யதுர் ஷன் 66 கிலோகிராம் மேல் நிறைப் பிரிவில் பங்கு கொண்டு தேசிய வெண்கலப் பதக்கத்தைத் தமதாக்கி பாடசாலைக்கும், வலயத்திற்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். (3-299)



93 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட சேர் ஜோன் ராபெற் தட்டெறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் கு. கிருஷான் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியிலேயே 48.32 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ICBT பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் யா/மகாஜன கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் அணியினர் முதல் இடத்தைப்பெற்று வெற்றிக் கேடயத்தை கைப்பற்றிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்த வேண்டும்

## பஃப்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

**நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பஃப்ரல் அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பொது நிர்வாகம், உள்நாட்டு விவகாரங்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்னவுக்கு அனுப்பிய கடிதத்தில், பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ரோஹண ஹெட்டியாராச்சி, மாகாணசபை அமைப்பு ஒரு பிரதிநிதித்துவ ஜன நாயக கட்டமைப்பாக மீண்டும் நிறுவப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

தற்போது அது அதிகாரிகள் கையில் மட்டுமே இருப்பது ஜன நாயகத்திற்குப் புறம்பானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாக்களிக்கும் உரிமை அரசியலமைப்பின் 3 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மக்களின் இறையாண்மை அதிகாரத்தின் ஒரு பகுதியாகும் என்றும் நீண்டகால தாமதம் ஜனநாயக செயல்முறைகள் மீதான மக்களின் நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியுள்ளதாகவும் ரோஹண ஹெட்டியாராச்சி எச்சரித்துள்ளார். (நி)


## INVITATION FOR BID 2025
## Regular Maintenance & Repairs of Air Conditioners
## BASE HOSPITAL, POINT PEDRO

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the Medical Superintendent, Base Hospital, Point Pedro now invites sealed bids from eligible and qualified bidders for the Regular Maintenance & Repairs of Air Conditioners.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. Interested bidders may obtain further information from **address given below in 4** and inspect the bidding documents at the same place on any working days from **2025-09-16 to 2025-09-30** in between 09:00 hrs and 15:00 hrs.
4. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Medical Superintendent, Base Hospital, Point Pedro (T.P:021 226 3261, Fax:021 226 3262) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2025-09-16 to 2025-09-30 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
5. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Base Hospital, Point Pedro at or before 10.30 a.m on 2025.10.01.** Bid ID number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
6. Procurement Committee will have the rights to make final decision in the regarding the acceptance or rejection of Bids.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2025-09-16 until 2025-09-30** |
| **Pre-Bid Conference** | **At 10.30 A.M on 2025-09-23** |
| **Closing and Opening of Bids** | **At 10.30 A.M on 2025-10-01** |

| No | Bid ID | Description of Work | Qualifications | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Validity Period |
| 1 | BH/PPD/ACC/PRO/AC/2025 | Regular Maintenance & Repairs of Air Conditioners-90 Nos | Business Registration & CIDA Registration EM5 or above | 3,000.00 | 50,000.00 | 28.12.205 |

7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Office of the Base Hospital, Point Pedro** Commencing at **10.30 A.M on 2025-09-23.**

**Chairman**
**Divisional Procurement Committee**
**Base Hospital, Point Pedro.**

(C-3877)



## வலி-தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் சுன்னாகம்

**வருடாந்த பொதுக்கூட்டம்**

வலி-தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.09.2025 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத்தலைவர் வே.மகாதேவன் தலைமையில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதற்கான நிகழ்ச்சி நிரல் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**சங்க செயலாளர்** (5423)



## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்குபிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் :- திரு இராசரத்தினம் ஷாயகான்
விண்ணப்பதாரர் பெயர் :- திருமதி சாவித்திரி இராசரத்தினம்
முகவரி :- ஆவளை வடக்கு, சண்டிலிப்பாய்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20. கோணப்புலம் வீதியில் ஆதன இல. 68/21 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, மல்லாகம் இறை "வேர்லவை" என்ற ஆதனம் இராசரத்தினம் பெண் டெய்சி ராசமலர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது பிரசித்தநொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 2022.06. 25 ஆம் திகதியில் 12740 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் "வேர்லவை" நிலப்பரப்பு ஆறுகுழி ஒன்பது தசம் இரண்டு மூன்று (நிலப். 6 குழி 9.23 ) விஸ்தீரணமுள்ள ஆதனம் விண்ணப்பதாரரான இராசரத்தினம் ஷாயகான் என்பவரை வந்தடைந்துள்ளது.

இவ் ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தாய் உறுதிகளில் ஒன்றான பிரசித்த நொத்தாரிசு R.M.சிவப்பிரகாசம் முகதாவில் 1950.04.17ஆம் திகதியில் 32ஆம் இலக்கத்தில் நிறைவேறிய பிரிவிடல் உறுதியில், குறித்த ஆதனம் காலஞ்சென்ற செல்லையா இராசரத்தினத்திற்குச் சொந்தமானது என்றும் அவரது இறப்பின் பின் பிள்ளைகளான தனபாலசிங்கம் கைம்பெண் ஜெய்சாந்தினி, பத்மினி, ரிச்சட் தேவராஜா, இராசரத்தினம் கிருபைராஜா, ஜெயராசா, காமினி, எட்வேட் செல்வராஜா, இராசநாயகம் இராஜரட்ணம் ஆகியோரை வந்தடைந்துள்ளதாகவும் பத்மினியும் தேவராசாவும் திருமணம் செய்யாமல் இறக்க சகோதரப் பங்குகள் ஏனையோரை வந்தடைந்தது என்றும் கிருபைராசாவின் ஒரே புதல்வி கிறிஸ் சாதனாவை வந்தடைந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை "வேர்லவை" நிலப்பரப்பு பதின்மூன்று குளி பதின்மூன்றோடு நான்கில் மூன்று (நிலப். 13 குளி 13 3/4)இப்பாகம் உலாந்தா J.சபாபதியால் 04.04.1950 இல் அளந்து 1361ஆம் இலக்கத்தில் தயாரித்த படத்தில் துண்டுகள் 01,02,03,04,05 என சுட்டப்பட்டுள்ளது. இதில் துண்டு 02 என சுட்டிய பாகம் நில.பர 6 குளி 10 1/16 இப்பாகம் தற்போது உத்தரவு பெற்ற உலாந்தா S. மதியழகன் என்பவரால் 07.08.2020இல் அளந்து தயாரித்த SMA/1723ஆம் இலக்கத்தில் தயாரித்த படத்தின் படி நில.பர 6 குளி 09.23 ஆகும்.

இதற்கு எல்லைகள்
கிழக்கு - குமாரசிங்கம் சிவபாக்கியத்தின் ஆதனம்
வடக்கு - ஒழுங்கை முகப்பும் ஜெயராசா பெண் சரோஜினியின் ஆதனமும்
மேற்கு - குழந்தை கண்ணப்பாபிள்ளையின் ஆதனம்
தெற்கு -சிவராசா பெண் ஜெயகௌரியின் ஆதனமும் தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய ஆதனமும் இதடங்கலும் மேலும் குறித்த 1361ஆம் இலக்கப்படத்தில துண்டு 03 என சுட்டிய பாகத்திலுள்ள கிணற்றில் பங்கும் தூர்வைப்பங்கும் குறித்த 1361 படத்தில் துண்டு 03 இற்கு சுட்டிய பாதையூடாக வடக்கே உள்ள ஒழுங்கைக்கு போக்குவரத்து செய்யுமுரித்தும் தற்போது இவ்வாதனத்தை இராசரத்தினம் ஷாயகான் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தை உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் இராசரத்தினம் ஷாயகான் எனும் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).** (5399)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயப் பெருவிழாவின் தீர்த்தத்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:- சிவசாந்தன்)

# "போர்க்குற்றம் இடம்பெறவில்லை"

## பிரதி அமைச்சரின் கருத்து கண்டிக்கத்தக்கது

## செல்வம் எம்.பி

**(மன்னார்)**

**இலங்கையில் எந்தவிதமான போர்க்குற்றங்களும் இடம்பெறவில்லை என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறிய கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், அவரது கருத்து தொடர்பில் ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் எந்தவிதமான போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை. போரிலே சில அசம்பாவிதங்கள் இடம்பெற்று இருக்கலாம். அதற்காக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று இருக்கிறது என்று எண்ணி விடக் கூடாது என்கிற அடிப்படையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் தனது கருத்தை கூறி இருக்கிறார்.

இன்று செம்மணி மனித புதைகுழிகள் சாட்சிகளாக கருதப்படுகின்ற நிலையிலே செம்மணி மனித புதைகுழி கூட மனித உரிமை மீறலாக இருக்காது என்கிற அடிப்படையில் பிரதி பாதுகாப்பு அமைச்சரின் கருத்துக்கள் அமைந்துள்ளது.

அதனடிப்படையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் இக் கருத்தை தெரிவித்தமையானது கண்டனத்திற்குரிய விடயம்.

இந்த அரசு செம்மணி மனித புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை செய்வதாக கூறுகின்ற நிலையில் இன்னும் ஒரு கருத்தாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது சபாநாயகர் அதற்கான அனுமதியை வழங்கவில்லை. அவர் மீது குற்றச்சாட்டுக்கள் இருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் செயற்பாட்டில் குறிப்பாக அவர் இராணுவத்தின் உயர் பதவியில் இருந்த காரணத்தினால் குறித்த சம்பவத்துடன் அவர் தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே இந்த கருத்துக்களை வைத்துப் பார்க்கின்ற போது அவர் உண்மையில் மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டுள்ளாரா? என்கிற சந்தேகம் அவரது கருத்து ஊடாக எழுந்துள்ளது.

ஆகவே தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்டுள்ள அநீதிகள், கொடூரங்கள், படுகொலைகள் அத்தனையும் உண்மை இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு பிரதி பாதுகாப்பு அமைச்சரின் கருத்து அமைந்துள்ளது. இக்கருத்து தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அரசாங்கம் அவரை இடைநிறுத்தி உயிர்த்த ஞாயிறு சம்பந்தமாகவும், ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும் விசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன்.

மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை. போரிலே அசம்பாவிதங்கள் இடம்பெற்று இருக்கலாம் என்று கூறுகின்ற, அனைத்து உண்மைகளையும் மூடி மறைக்கும் வகையில் அவரது கருத்து கூறுகிறது.

எமது தேசத்தில் ஆண்கள், பெண்கள்,சிறுவர்கள், வயோதிர்கள் என பார்க்காது கொடூரமாக சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகொலை செய்யப்பட்ட வரலாறு இன்று எழுதப்படுகின்ற வகையிலே செம்மணி மனித புதைகுழி காணப்படுகின்றது. ஆகவே ஐ.நா சபையும் தனது கருத்தை கூறியுள்ளது.

உள்ளக விசாரணையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே பிரதி அமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார். (6-285)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

மகேந்திரா ஐடியல் பினான்ஸ் சுன்னாகம் கிளையின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கிளை முகாமையாளர் த. சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திருநெல்வேலி சிவன் அம்மன் ஆலய குருக்கள் ஆனந்த கிருஷ்ண சர்மா, நாவந்துறை செயிண்ட் நிக்கோலஸ் தேவாலய பாதிரியார் அருட்தந்தை எஸ். யூஜின் பிரான்சிஸ், சுன்னாகம் MPCS தலைவர் எஸ். முருகனேசன் மற்றும் சுன்னாகம் முத்து பிரிண்டர்ஸ் முகாமைத்துவ இயக்குநர் எம். சதீஸ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (3)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்**

ச.சானுஜா-165, மோ.விதேஷ்-150, த.ஸஷ்வின்-150, பி.கி.கிஷாங்னா-144, கே.கபிஷ்கா-138 , தி. அக்ஷயன்-135

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 150 | 170 | 200 |
| தக்காளி | 250 | 220 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 240 | 250 | 180 | 300 |
| கரட் | 200 | 320 | 300 | 280 | 350 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 150 | 150 | 150 | 120 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 600 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 300 | 350 | 300 | 350 | 600 |
| லீக்ஸ் | 250 | 200 | 300 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 80 | 150 |
| கறிமிளகாய் | 300 | 400 | 300 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 300 | 180 | 400 |
| போஞ்சி | 600 | 500 | 350 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 300 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 60-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 600 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 230 | 200 |
| இராசவள்ளி | 800 | 650 | 600 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2026
# கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2026.01.01- 2026.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2025.09.15-2025.09.29**
**(அலுவலக நாட்களில் மு.ப 09.00 பி.ப 01.00)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :- 2025.09.30**
**செவ்வாய்க் கிழமை மு.ப 10.00 மணி**

**கேள்விதிறக்கும் திகதி :- 2025.09.30 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி**
**கேள்விதிறக்கும் இடம் :- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர்/செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2025.09.30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் **2025.09.30** ஆம் **திகதி செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | **சேவைச்சந்தை -கிளிநொச்சி** | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன், கருவாடு, முட்டை | 75,000.00 | 1,000.00 | 5,854,200.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 100,000.00 | 1,000.00 | 8,108,100.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 50,000.00 | 1,000.00 | 3,901,700.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை தேங்காய் | 100,000.00 | 1,000.00 | 8,252,200.00 |
| 5 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் .பாதுகாப்பு நிலையம் | 75,000.00 | 1,000.00 | 5,417,500.00 |
| 6 | கிளிநொச்சி சந்தை இல.1 கோழி இறைச்சிக்கடை | 60,000.00 | 1,000.00 | 4,424,860.00 |
| 7 | கிளிநொச்சி சந்தை இல.2 கோழி இறைச்சிக்கடை | 60,000.00 | 1,000.00 | 4,452,250.00 |
| 8 | கிளிநொச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 75,000.00 | 1,000.00 | 6,270,000.00 |
| 9 | கிளிநொச்சி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,683,000.00 |
| 10 | கிளிநொச்சி சந்தை பன்றியிறைச்சிக்கடை | 2,500.00 | 1,000.00 | 147,500.00 |
| 11 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 40,500.00 |
| | **கிளிநகர்ப் பகுதி** | | | |
| 1 | கிளிநொச்சி சிறுவர் பூங்கா ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 15,000.00 | 1,000.00 | 964,700.00 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 1,500.00 | 1,000.00 | 100,210.00 |
| 3 | கிளிநொச்சி பசுமைப்பூங்கா கலையகம் | 1000.00 | 1,000.00 | 12,462.29 |
| | **பொதுச்சந்தை – பரந்தன்** | | | |
| 1 | பரந்தன் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 79,200.00 |
| 2 | பரந்தன் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 1,000.00 | 2,007,622.10 |
| 3 | பரந்தன் சந்தை கோழி இறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 621,622.10 |
| 4 | பரந்தன் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 1,000.00 | 137,866.30 |
| 5 | பொது மலசலகூடம் பரந்தன் | 1000.00 | 1,000.00 | 21,600.00 |
| | **பொதுச்சந்தை- வட்டக்கச்சி** | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 2,500.00 | 1,000.00 | 231,550.00 |
| 2 | வட்டக்கச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 792,000.00 |
| 3 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 7,000.00 | 1,000.00 | 517,000.00 |
| 4 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 297,000.00 |
| 5 | இராமநாதபுரம் கோழியிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 167,200.00 |
| 6 | இராமநாதபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 68,200.00 |
| | **பொதுச்சந்தை- இரணைமடு** | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 2,000.00 | 1,000.00 | 166,100.00 |
| 2 | இரணைமடு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,751,200.00 |
| 3 | இரணைமடுசந்தை கோழி இறைச்சிக்கடை | 7,000.00 | 1,000.00 | 490,160.00 |
| | **கனகாம்பிகைக்குளம்** | | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 4,400.00 |
| | **பொதுச்சந்தை- உருத்திரபுரம்** | | | |
| 1 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 6,000.00 | 1,000.00 | 440,000.00 |
| 2 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 12,098.90 |
| 3 | D10உருத்திரபுரம் கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 331,705.00 |
| 4 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 220,000.00 |
| | **பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம்** | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 10,000.00 | 1,000.00 | 661,100.00 |
| 2 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 687,500.00 |
| 3 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 7,000.00 | 1,000.00 | 411,000.00 |
| | **பொதுச்சந்தை- தருமபுரம்** | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 2,000.00 | 1,000.00 | 165,880.00 |
| 2 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 632,500.00 |
| 3 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 239,800.00 |
| | **பொதுச்சந்தை- கல்லாறு** | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 30,250.00 |
| 2 | கல்லாறு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 11,700.00 |
| | **பொதுச்சந்தை- ஜெயந்திநகர்** | | | |
| 1 | ஜெயந்திநகர் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 880,000.00 |
| 2 | ஜெயந்திநகர் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 368,500.00 |
| | **பொதுச்சந்தை- ஊற்றுப்புலம்** | | | |
| 1 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 287,650.00 |
| | **பொதுச்சந்தை- ஆனைவிழுந்தான்** | | | |
| 1 | ஆனைவிழுந்தான் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 167,200.00 |
| | **வன்னேரிக்குளம்** | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | 24,852.25 |
| | **பொதுச்சந்தை- கண்டாவளை** | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 67,100.00 |
| | **பொதுச்சந்தை- முரசுமோட்டை** | | | |
| 1 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 199,100.00 |
| 2 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 21,192.61 |
| | **பொதுச்சந்தை- அக்கராயன்** | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 52,800.00 |
| | **பொதுச்சந்தை- புன்னைநீராவி** | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 176,000.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 253,000.00 |

**நிபந்தனைகள்**

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்பு பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விசபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விதாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம்) உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம். கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. கேள்வி விண்ணப்பங்களை விண்ணப்பதாரி அடையாள அட்டையுடன் நேரில் சமூகமளித்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
8. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது ஒருவார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
9. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வி வைப்பு பணத்தினை செலுத்த தவறும் பட்சத்தில் 2 ஆவது கேள்விதாரர் 1 ஆவது கேள்விதாரரின் கேள்வி கோரல் தொகையில் கேள்வியை ஏற்பது. 2 ஆவது கேள்விகாரரும் கேள்வியை ஏற்காத சந்தர்ப்பத்தில் 3 ஆவது கேள்விதாரர் 1 ஆவது கேள்விதாரரின் கேள்வி கோரல் தொகையில் கேள்வியை ஏற்பது அல்லது மீள் கேள்வி கோரப்படும்.
10. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
11. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதி வேலைநாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் மாதாந்தக் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.
12. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைகட்டணங்கள் செலுத்ததவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்..
13. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.
14. துவிச்சக்கர வண்டி. மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 10.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா.20.00 உம், முச்சக்கர வண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 30.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிடமுடியும்.
15. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது 4% தூக்கு வரியாக அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
16. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் (அதி விஷேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
17. ஆரம்பகேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.
18. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடைகட்டப்படும்வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டிவழங்கப்படவில்லை என்றகாரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
19. இறைச்சிகடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.
20. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சபையினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைதாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
21. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
22. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராக நீதிமன்ற நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(C-3876 15.09.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மியன்மாரில் வான்வழித் தாக்குதல் 19 பாடசாலை மாணவர்கள் உயிரிழப்பு



(நைப்பிடோவ்)

மியன்மாரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் 22 மாணவர்கள் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 15 தொடக்கம் 21 வயதுக்குட்பட்ட மாணவர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயுதக் குழுவுக்கும், அரச படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது, இரண்டு தனியார் உயர்நிலைப் பாடசாலைகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## வெளிநாட்டினருக்கு எதிராக லண்டனில் மிகப்பெரிய பேரணி

(லண்டன்)

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மிகப் பெரிய பேரணி நடத்தப்பட்டது.

தீவிர வலதுசாரி ஆர்வலர் டாமி ராபின்சன் ஏற்பாடு செய்த லண்டன் பேரணியில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் 26 பொலிஸாருக்கும் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து 25 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், லண்டனில் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட மிகப்பெரிய பேரணிக்கு உலகப் பெரும் பணக்காரரான எலான் மஸ்க் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மஸ்க் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ள வீடியோவில், "வாக்காளர்களை இறக்குமதி செய்கிறார்கள். தங்கள் நாட்டில் உள்ளவர்கள் தங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று தெரிந்தவுடன் அவர்கள் மற்ற நாடுகளிலிருந்து மக்களை இறக்குமதி செய்து தங்களுக்கு வாக்களிக்கச் செய்வார்கள். இது வெற்றி பெறுவதற்கான ஒரு உத்தி. இதை நிறுத்த வேண்டும்" என்று தெரிவித்தார். (நி)



# கொங்கோவில் படகுக...

# 193 பேர் உயிரிழப்...

(கின்ஷாஷா)

**வடமேற்கு கொங்கோவில் நடந்த இரண்டு தனித்தனி படகு விபத்துகளில் 193 பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் மாயமாகி உள்ளனர்.**

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில், வட மேற்கில் உள்ள ஈக்வடார் என்ற மாகாணத்தில் படகு ஒன்று ஆற்றில் கவிழ்ந்தது. இதில் 86 பேர் உயிரிழந்தனர். அதில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் மாணவர்கள். இந்தப் படகு விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. அதிகளவில் ஆட்களை ஏற்றிச் சென்றதும், இரவு நேரத்தில் பயணம் மேற்கொண்டதுமே காரணம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈக்வடேர் மாகாணத்தின் லுகோலேலா பிரதேசத்தில் உள்ள கொங்கோ ஆற்றின் குறுக்கே 500 பயணிகளுடன் சென்ற ஒரு படகு தீப்பிடித்து கவிழ்ந்தது. இந்த விபத்தில் 107 பேர்

## வெளிநாட்டு தொலைக்காட்சித் தொடர்... பார்த்தாலோ பகிர்ந்தாலோ மரணதண்டனை...

### சர்வாதிகாரத்தின் உச்சத்தில் வடகொரியா



(பியாங்யாங்)

வட கொரியாவில், தென் கொரியா உள்ளிட்ட வெளிநாட்டுத் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்ப்பது அல்லது பகிர்வது கடுமையான குற்றமாகக் கருதப்படுகிறது. இதுகுறித்து கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

வட கொரிய அரசு, புதிய தொழில்நுட்பங்களின் உதவியுடன் மக்களின் அன்றாட நடவடிக்கைகளை மிகவும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. இதன் விளைவாக, தண்டனைகள் மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைமுறைக்கு வந்த புதிய சட்டங்கள், அந்நாட்டுக் குடிமக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை அதிகரித்துள்ளன.

தென்கொரியாவின் பிரபல "கே-ட்ராமாக்கள்" உட்பட வெளிநாட்டுத் தொலைக்காட்சி... தொடர்களை விநியோகித்... தற்காக, பல வட கொரியர்க... ஏற்கனவே தூக்கிலிடப்பட்டுள்... னர் என வட கொரியாவுக்கா... மனித உரிமைகள் ஆணைய... ளர் ஜேம்ஸ் ஹீனன் தெரிவி... தார்.

இந்த 14 பக்க அறிக்கை... 2014 முதல் வட கொரியாவி... ருந்து தப்பிச் சென்ற 30... இற்கும் மேற்பட்ட மக்களிட... நடத்தப்பட்ட நேர்காணல்களி... அடிப் படையில் தயாரிக்கப்ப...டுள்ளது.

இந்த அறிக்கையை வ... கொரிய அரசாங்கம் முற்றி...மாக நிராகரித்துள்ளது. இந்... அறிக்கைக்கு அனுமதியளித்... ஐக்கிய நாடுகள் மனித உரிமை...கள் பேரவையின் தீர்மானத்... எதிர்ப்பதாகவும் அந்நாடு தெ...வித்துள்ளது.

இந்த அறிக்கை, வட கொ...யாவில் மனித உரிமைகள் எந்... அளவுக்கு மீறப்படுகின்றன என்... தை வெளிச்சம் போட்டுக் காட்...யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கள் கவிழ்ந்து விபத்து ...ப்பு - பலர் மாயம்!



உயிரிழந்தனர். 209 பேர் அதிஷ்டவசமாக உயிர் பிழைத்தனர். வடமேற்கு கொங்கோவில் இரண்டு படகு விபத்துகளில் 193 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் மாயம் ஆகி உள்ளனர். அவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது.

மத்திய ஆபிரிக்க நாட்டில் படகுகள் கவிழ்வது அடிக்கடி நடந்து வருகிறது. இது போன்ற பயணங்களில், லைப் ஜாக்கெட்டுகள் அரிதானவை. அதிக சுமையுடன் பல படகுகள் இரவில் பயணிக்கின்றன. விபத்துகளின் போது மீட்பு முயற்சிகளை சிக்கலாக்குகின்றன என மீட்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

## 100 வயதைத் தாண்டியவர்கள் ஜப்பானில் அதிகரிப்பு

(டோக்கியோ)

உலகிலேயே வயதானவர்கள் அதிகம் வசிக்கும் நாடு ஜப்பான். அங்கு ஆண்டுதோறும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதியோர் தினமாக கொண்டாடப்படுகிறது.


1963 ஆம் ஆண்டு இந்த கணக்கெடுப்பு தொடங்கியது.

அப்போது 100 வயதானவர்களின் எண்ணிக்கை 153 ஆக இருந்தது. அதன்படி, இந்த ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. இதில் 100 வயதானவர்களின் எண் ணிக்கை சுமார் 1 லட்சமாக அதிகரித்துள்ளது. அவர்களில் 88 சதவீதம் பேர் பெண்கள் ஆவர்.

இந்த ஆண்டில் மட்டும் புதிதாக 52,310 பேர் 100 வயதை தாண்டி உள்ளனர். அவர்களுக்கு பிரதமர் கையால் வாழ்த்து மடல், பரிசுத்தொகை மற்றும் வெள்ளிக் கோப்பை ஆகியவை முதியோர் தினமான இன்று வழங்கப்படுகிறது.

இதுகுறித்து அந் நாட்டின் சுகாதாரத்துறை மந்திரி டகாமரோ புகோகா கூறுகையில், உலகின் மற்ற பகுதிகளில் சாப்பிடும் உணவுகளில் உப்பு மற்றும் சர்க்கரை அதிகளவில் கலந்துள்ளது.


இதற்கு மாற்றாக மீன், காய்கறி போன்ற ஆரோக்கியமான உணவுகளை ஜப்பானிய மக்கள் அதிகம் எடுத்துக் கொள்கின்றனர். நடைபயிற்சியும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால்தான் மற்ற நாடுகளை விட ஜப்பானிய முதியவர்கள் சுறுசுறுப்பாக செயற்படுகின்றனர் எனத் தெரிவித்தார். (நி)



## ரஷ்யாவிடம் எரிபொருள் கொள்வனவு நிறுத்துமாறு நேட்டோ நாடுகளுக்கு அழுத்தம்

(வோஷிங்டன்)

ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் வாங்குவதை நிறுத்துமாறும், உக்ரைன்-ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யாவிற்கு அழுத்தம்கொடுக்குமாறும்நேட்டோ நாடுகளுக்கு அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.



அனைத்து நேட்டோ நாடுகளும் கூட்டாக ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி கூறியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எதிர்காலத்தில் உக்ரைன் நெருக்கடியை முடி வுக்குக் கொண்டுவர ரஷ்யா மேலும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (நி)

## பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதிக்கு 27 வருட சிறைத்தண்டனை

(பிரேசில்)

பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல் சனாரோவுக்கு இராணுவ புரட்சியை ஏற்படுத்த சதி செய்தமைக்காக, அந்த நாட்டின் நீதிமன்றினால் 27 ஆண்டுகளும் 3 மாதங்களும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ, 2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியான லூயிஸ் இனாசியோ லூலாடா சில்வாவிடம் தோல்வியடைந்தார்.

அதன்போது, தமது ஆட்சியை தக்கவைத்து கொள்ள இராணுவ புரட்சியை ஏற்படுத்துவதற்கான சதித்திட்டத்தை வழிநடத்தியதாக அவர் குற்றம் சாட்டப்பட்டார்.

விசாரணையில் அந்த நாட்டு உயர்நீதிமன்றில் நான்கு நீதியரசர்கள் அவரை குற்றவாளி என்று கண்டறிந்தனர், ஒருவர் அவரை விடுவிப்பதற்கு தீர்மானித்திருந்ததாக சர்வதேச ஊடக தகவல்கள் தெரிவித்தன.

தற்போது வீட்டுக் காவலில் உள்ள ஜெயர் போல் சனாரோ தீர்ப்பின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

இதனிடையே, இந்த தீர்ப்பு நியாயமற்றது என்று அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ருபியோ குறிப்பிட்டுள்ளார். (நி)

## அல்பேனியா அமைச்சரவையில் உலகின் முதல் 'ஏஐ' அமைச்சர்

(அல்பேனியா)

உலகில் முதல் முறையாக அல்பேனியா நாடு செயற்கை நுண்ணறிவு அமைச்சரை நியமித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அந்நாட்டு அமைச்சரவையில் ஊழல் தடுப்புத் துறை அமைச்சராக ஏஐ நியமிக்கப்பட்டதாக அல்பேனிய பிரதமர் எடி ராமா கடந்த வியாழக்கிழமை அறிவித்தார்.

"சூரியன்" என்று பொருள்படும் "டியெல்லா" என்று அந்த ஏஐ அமைச்சருக்கு பெயரிடப்பட்டுள்ளது.



டியெல்லா, 100 சதவீத ஊழல் இன்றியும் விரைவாகவும் வெளிப்படையாகவும் அரசு ஒப்பந்தங்களை கையாள உதவும் என்று பிரதமர் எடி ராமா தெரிவித்தார்.

1990 இல் கம்யூனிஸ்ட் ஆட்சி வீழ்ச்சிக்கு பிறகு அல்பேனியாவில் ஊழல் மலிந்து காணப்படுகிறது. டியெல்லாவின் வருகை மக்களுக்கு நம்பிக்கையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

...டர்;
...ன!

...காட்சித்
...யாகித்த
...ியர்கள்
...ட்டுள்ள
...வுக்கான
...ணையா
...தரிவித்

...ிக்கை,
...யாவிலி
... 300
...களிடம்
...ல்களின்
...க்கப்பட்

...ய வட
...ற்றினு
... இந்த
...யளித்த
...உரிமை
...னத்தை
...டு தெரி

... கொரி
...ள் எந்த
...ன என்ப
...் காட்டி
...கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்பர் சாரதிகள் போராட்டம்!



(தருமபுரம்)

டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய்பயன்படுத்திஓடும் டிப்பர்வாகனங்கள் டீசலுக்கு மாறுவதற்கு ஒருவார கால அவகாசம் தருமாறு கோரியும் மண்ணெண்ணெய் பயன்படுத்தும் அனைத்தும் வாகனங்களையும் பொலிஸார் கண்டறிய வலியுறுத்தியும் டிப்பர் வாகன சாரதிகள் A9வீதி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகாமையில் நேற்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன் போது பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து டிப்பர் சாரதிகளுடன் கலந்துரையாடியதைத்தொடர்ந்து ஒரு வாரகால அவகாசத்திற்கு சம்மதம் தெரிவித்ததைத்தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. (8-316)

# பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் யா/மயிலணி சைவ மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை முதல்வர் பா. பார்த்தீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஜமுனா இராஜசீலன், சிறப்பு விருந்தினர்களாக யா/ மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி மோகனசுந்தரி ஜெயக்குமார், யா/ இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் க.கஜேந்திரன், யா/ குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி. சிவதர்சினி கங்காதரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சுன்னாகம், தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை முகவர் ந. வசீகர் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் நினைவுரையினை யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசரியர் திருமதி. உலகேஸ்வரி சேதுபதி நிகழ்த்தவுள்ளனர். (3)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>8 இல் செவ்<br>கி.பா:15 1/2<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BankingCourse, BankOfficer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/16035 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 22<br>உயரம்: 5'<br>தகைமை/ தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/16057 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>12 இல் செவ்<br>கி.பா: 11 1/2<br>உயரம்: 6"1'<br>தகைமை/தொழில்: BEng, MEng, Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16036 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>12 இல் சூரி செவ்<br>கி.பா: 8 3/4<br>தகைமை/தொழில்: BCom<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16059 |
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 33 1/4 உயரம்: 6"<br>தகைமை/தொழில்:Dip in Computer, Work (pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/16037 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 68<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்-Accountant (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியானஆண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/16061 |
| பிறப்பு: 2001 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>7 இல் செவ் உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Executive officer<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/16038 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி. பா: 16<br>உயரம்: 5"<br>தகைமை/தொழில்: BSc, Vetnary Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/16062 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>11 இல் சூரி செவ்<br>கி.பா: 04 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Civil Engineer (Canada)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16039 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>8 இல் சூரி செவ்<br>கி.பா:0<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்-Assistant Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியானஆண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/16063 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 443

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அடம்பிடிக்கும் குழந்தைகள்!

என் குழந்தை அடம்பிடிக்கிறான். என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை என்று கவலைப்பட்டார் ஒரு அப்பா.

என்ன செய்வது. அப்பாவோட குணம் கொஞ்சமாவது பிள்ளைக்கும் இருக்கத்தானே செய்யும் என்றேன் நான்.

அடபோங்க சார். அவனை அடக்குவதற்கு ஏதாவது வழி சொல்லுவீர்கள் என்று பார்த்தால் நீங்கள் என்னுடைய சரித்திரத்தை புரட்ட ஆரம்பிக்கிறீர்கள் என்றார் அவர்.

சரி. பையன் அடம் பிடிக்கிறானா? அவனை நீங்கள் எப்படி அடக்குகின்றீர்கள் அதைச் சொல்லுங்கள் முதலிலே என்றேன்.

என்ன செய்வேன் மிரட்டுவேன், அடிப்பேன். அவ்வளவு தான்! என்றார்.

அடித்தால் அடங்கிடுவானா? என்று கேட்டேன்.

அது எப்படி அடங்குவான் இன்னமும் தீவிரமாக அடம் பிடிக்க ஆரம்பித்துவிடுவான் கத்தி ரகளை செய்துவிடுவான் என்றார்.

குழந்தை அடம்பிடிக்கின்றானே என்பது குடும்பங்களிலே உள்ள ஒரு பிரச்சினைதான்!

இதற்கு இப்போது மருத்துவர்கள் ஒரு சுலபமான வழியைச் சொல்கிறார்கள்.

அது என்னவென்றால் ஒரு குழந்தை அடம்பிடித்தால் அதை அடிக்கக் கூடாதாம்! அதற்குப் பதிலாக வேறு ஒரு காரியம் செய்யலாமாம். அது என்னவென்றால் குடும்பத்திலே உள்ள எல்லோரும் ஒன்றுசேர்ந்து அந்தக் குழந்தையிடம் கொஞ்ச நேரம் போசாமல் இருந்துவிட வேண்டுமாம்

குழந்தையாலே பேசாமல் இருக்கமுடியாது.

தன்னுடைய தவறை உணர்ந்து அது வருத்த ஆரம்பிக்கும். இப்படி தொடர்ந்து செய்து கொண்டு வந்தால் குழந்தை கொஞ்ச நாளிலே அடம்பிடிப்பதை நிறுத்திவிடும்.

அதே மாதிரி சில குழந்தைகள் சரியான காரணம் இல்லாமல் அடம் பிடிப்பதற்காக கத்துவதை நிறுத்துவதற்குக் கூட வழி இருக்கிறது.

அது எப்படியென்றால். அது அழுகின்ற சமயத்திலே அந்த சத்தத்தை ஒரு "டேப் ரெக்கோர்டர்" மூலமாக பதிவு செய்துவிட்டு குழந்தை கத்த ஆரம்பித்தால் உடனே ஏற்கனவே பதிவு செய்து வைத்துள்ள அழுகை சத்தத்தைப் போட்டு அந்தக் குழந்தை காதிலே விழுகிற மாதிரி செய்யுங்கள்.

தன்னுடைய அழுகை சத்தத்தைக் கேட்க ஆரம்பித்தவுடனே அந்த குழந்தை தான் அழுவதை நிறுத்தி விடும்.

சில குழந்தைகள் சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடிக்க குழந்தையை மேலும் வற்புறுத்திச் சாப்பிடச் சொல்லக்கூடாது.

சிலபேர் கட்டாயப்படுத்தி சாப்பாட்டைத் திணிப்பார்கள். அது மிகவும் தவறு.

குழந்தைக்கு விபரம் தெரிந்த பிறகு சாப்பாட்டு விடயத்திலே நீங்கள் தலையிட வேண்டிய அவசியமே இல்லை. பசித்தால் சாப்பிட வேண்டும் என்பது அதற்குப் புரியும்.

அதனாலே அது தானாகவே சுதந்திரமாக எடுத்துப் போட்டுச் சாப்பிட அனுமதிக்க வேண்டும்.

சாப்பிடு, சாப்பிடு என்று வற்புறுத்தக்கூடாது. நீங்கள் அதை வற்புறுத்தாமல் இருந்தால், அது உங்களை வித்தியாசமாகப் பார்க்க ஆரம்பிக்கும்.

உண்மையிலேயே பசி இருந்தால் தனக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவை எடுத்துப் போட்டு அந்தக் குழந்தை சாப்பிடும். எந்தப் பிரச்சனையும் இருக்காது.

இதுமாதிரி சில நுட்பங்களை மனதிலே வைத்துக் கொண்டால் வீட்டிலே குழந்தைகளாலே எந்தப் பிரச்சனையும் இருக்காது.

இந்தக் காலத்துப் பையன் ஒருத்தன். ரொம்பக் கவலையோடு வந்தான்.

என்ன விடயம்! என்று விசாரித்தேன்.

என்னுடைய அப்பா என்னிடம் ஒரு மாதம் உன்கூட பேசமாட்டேன் போ! என்று சபதம் போட்டுவிட்டார் என்றான். அதற்காகவா கவலைப்படுகின்றாய் என்றேன்.

இல்லை. அந்த ஒரு மாதக்கெடு இன்றோடு முடியுது. அதற்காகத் தான் கவலைப்படுகின்றேன் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தேன்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தேன் என்பது மலர்களின் மகரந்தங்களில் இருந்து உற்பத்தியாகின்ற இனிப்பான மற்றும் பிசுபிசுப்பான திரவம் ஆகும். உலகம் முழுவதும் உள்ள ஆரோக்கியமான உணவுகளில் ஒன்றாகப் பார்க்கப்படுகின்ற தேன், ஏராளமான மருத்துவப் பயன்களைக் கொண்டது. இயற்கையான தேன் அதன் நிறத்தைக் கொண்டு தரம் பிரிக்கப்படுகிறது. தேன் இரண்டு வடிவங்களில் கிடைக்கிறது. இயற்கை நிலையில் உள்ளது. மற்றையது பதப்படுத்தப்பட்டது. இயற்கை நிலையில் உள்ள தேன் அனைத்து நொதிகள், மகரந்த துளிகள் மற்றும் பிற நுண்ணூட்டச் சத்துக்களைக் கொண்டிருக்கிறது. இவை வெப்பத்தின் மூலம் தேன் பதப்படுத்தப்படுகிற பொழுது வழக்கமாக வடிகட்டி வெளியேற்றிவிட அல்லது அழிக்கப்பட்டு விடப்படுகிறது.

இயற்கை நிலையில் உள்ள தேன் வடிகட்டப்படாமல் இருப்பதால் அது உடனடியாக உறைந்து விடுகிறது. மற்றொருபுறம் பார்க்கும் போது பதப்படுத்தப்பட்ட தேன் நீண்ட நாட்களுக்கு திரவ வடிவத்திலேயே நீடிக்கிறது. தேனின் நறுமணம், சுவை, நிறம் மற்றும் குணங்கள் அவை எந்த மகரந்தத்திலிருந்து எடுக்கப்படுகின்றது என்பதில் இருக்கின்றது.

மலர்களின் தனித்த வாசங்கள் மற்றும் நறுமண சுவைகள் ஆகியவை அவற்றின் மகரந்தத்துக்குள் ஊடுருவி அதில் உற்பத்தியாகும் தேனில் பிரதிபலிக்கின்றன. தேனின் சுவை, நிறம் மற்றும் பண்புகள் ஆகியவை ஒரே நாடாக இருந்தாலும் பிதேசத்துக்குப் பிரதேசம் மாறுபடுகிறது. தேன் எளிய காபோவைதரேற்றுக்கள் மற்றும் இயற்கை சர்க்கரையை முக்கிய உட்பொருளாகக் கொண்டிருக்கிறது. அந்த சர்க்கரை குளுக்கோஸ் மற்றும் புரக்ரோஸ் ஆக இருக்கிறது. தேன் கொழுப்பு அற்றது மற்றும் கொழுப்பு சக்தி அற்றது. சர்க்கரை அதிகரிப்பு குறியீட்டில் தேன் குறைவான இடத்தை பிடித்திருக்கிறது. அதாவது தேனில் இருக்கும் காபோவைதரேற்று மெதுவாக உடைகின்றன. மற்றும் இரத்த சர்க்கரை அளவைக் குறிப்பிடத்தக்கவைக்கு பாதிப்பு இல்லை. கலப்படமற்ற தூய தேனை அளவாக நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் போது சர்க்கரைக்கு பதிலாக ஒரு மிகச்சிறந்த மாற்றாக இருக்கிறது.

மேலும் இன்சூலின் அளவுகளை அதிகரிப்பதன் மூலம் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமென சில ஆய்வுகளும் தெரிவிக்கின்றன. இதைவிட தேனில்



நார்ச்சத்து, இரும்புச்சத்து, கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம், சோடியம், உயிர்ச்சத்து B2, B3, B6, B9 உயிர்ச்சத்து C ஆகியவையும் காணப்படுகிறது. இவ்வளவு சத்துக்கள் நிறைந்த தேன் திரவத்தங்கம் என அழைக்கப்படுகிறது. தேன் சளி அதீதமாக சுரப்பதைக் குறைக்கிறது. அது இருமல், ஆஸ்மா போன்ற நோய்களுக்கு சிறந்தது. தேனை பயன்படுத்தும் போது இரைப்பை சளிச்சவிலில் நுண்ணுயிர்கள் ஒட்டிக்கொள்வதை தடுக்கிறது. அதன் மூலம் இரைப்பை புண்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்கிறது. அத்துடன் குழந்தைகட்கு ஏற்படும் இரைப்பை, குடல் அழற்சியையும் குறைக்கிறது. இதனால் குழந்தைக்கு ஏற்படும் கழிச்சல் நிலைமையிலும் பயன்படுத்தலாம்.

தேனில் பொலிபினோல்கள் மற்றும் உயிர்ச்சத்து C மொனோபினோல்கள் மற்றும் ப்ளேவனொய்டுக்கள் தேனின் ஒட்சிஜனேற்ற எதிர்ப்புப் பண்புகளுக்கு பொறுப்பானவைகளாக இருந்து நோய்கள் மற்றும் மாரடைப்பு ஏற்படுவதைத் தடுக்கின்றது. நீண்ட கால அழற்சி, புற்று நோயை ஏற்படுத்தும் மற்றொரு அபாய காரணி ஆகும்.

ஒரு அழற்சி எதிர்ப்புக் காரணியாக தேன், அந்த மாதிரி அழற்சிகள் புற்றுநோய்யாக மாறாமல் இருப்பதை உறுதி செய்கிறது. ஒரு 200 மில்லி அளவு வெந்நீரை ஒரு டம்ளரில் எடுத்து 1 மேசைக்கரண்டி அளவு தேன் சேர்த்து கலந்து அதில் பாதி தேசிப்பழத்தை சாறு பிழிந்து சேர்த்து கலந்து தினம் ஒரு வேளை குடித்துவர உடல் எடை குறையும், இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களின் உற்பத்தியை கூட்டி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும். ஜீரண மண்டலத்திற்கு சிறந்தது. தேனில் நிறைய நன்மை பயக்கும் பக்றீரியாக்கள் காணப்படுவதால் ஜீரண மண்டலத்தின் செயற்பாட்டிற்கு சிறந்து விளங்குகிறது. தேனில் காணப்படும். ஐதரசன் பரடொக்சயிட்டு பக்றீரியாக்கள் ஒரு சில பங்கசுக்களுக்கு எதிராக தொழிற்படும் ஆற்றல் உண்டு.

காயங்கள், புண்களையும் இலகுவில் ஆற்றக் கூடியது. சித்தமருத்துவத்தின் படி நாம் ஒரு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகட்கே தேனை பயன்படுத்துகிறோம். பச்சைத் தேனில் குளோஸ்ரிடியம் பொட்டிலிசும் எனும் பக்றீரியா காணப்படுகிறது. இது குழந்தைகட்கு ஆபத்தானது.

சிறிய வகை தேனீக்கள் மரக்குச்சிகளில் கூடுகளைக் கட்டி தேனை சேகரிக்கிறது. கொம்புத்தேனில் அதிகளவு மகரந்தம் இருப்பதால் இந்த வகைத் தேன் சற்று அடர்த்தியானதாகவும் சற்று கெட்டித் தன்மை கொண்டதாகவும் இருக்கும்.

கொம்புத் தேன் வாத, பித்த மற்றும் கப அதாவது முக்குற்ற நோய்களுக்கு சிறந்தது. மேலும் மருத்துவப் பயன்களுக்காக தேன் எடுத்துக் கொள்ளும் போது வெறும் வயிற்றுடன் காலை அல்லது இரவு சாப்பாட்டிக்கு முன்னர் ஒரு சிறிய கரண்டியில் எடுத்து உமிழ் நீருடன் கலந்த சாப்பிட வேண்டும். காலையில் தேனைச் சாப்பிடும் போது இயற்கையான இனிப்பாக இது உடல் களைப்பைப் போக்கி சுறுசுறுப்பாக மாற்றும்.

குறிப்பாக காலையில் உடற் பயிற்சி செய்யும் போது உண்டாகின்ற உடற்சோர்வை போக்கி உடனடி ஆற்றலைக் கொடுக்கும். இரவில் தேனைச் சாப்பிடும் போது நல்ல தூக்கத்தை ஏற்படுத்தும். அதாவது தேன் செரட்டோனினை ஏற்பத்தி செய்யும் இந்த செரட்டோனினை உடல் மெலடோனினாக மாற்றும். இந்த மெலடோனின் தான் தூக்கத்தை மேம்படுத்த உதவி செய்யும்.

# இராசிபலன்

15.09.2025
ஆவணி 30, புதன்கிழமை
அட்டமி காலை 7.06 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 12.02 மணிவரை

நவமி பின்னரவு 5.05 மணிவரை
சுப நேரம் 12.03- 1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
அட்டமி நவமி

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

வளவன்




ஆதாயம்தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிராத்திப்பீர்கள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உடல் நலன் சீராகும்.




தொழில் நலன் கருதிய திட்டங்கள் கைகூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், ஆனந்தமான நாள்.




குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.




பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்கும் வாய்ப்புண்டு.




எப்படி நடக்குமோ என நினைத்த காரியங்கள் நல்ல படியாக நடைபெறும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நிலையான வருமானத்திற்கும் வழி பிறக்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மனித வாழ்வு குழந்தையின் கையில் இருக்கும் முட்டை போன்றது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 865



அவள் என்னை ஒரு தடவை கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அவளுக்கு ஏதோ என் பேரில் கோபம்!"

ஆமாமடி, வானதி! இந்த நாட்டில் உள்ள கலியாணமாகாத கன்னிப் பெண்களுக்கெல்லாம் உன் பேரில் கோபமாய்த்தானிருக்கும். அதற்காக நீ வருத்தப்படுவதில் பயனில்லை" என்று சொன்னாள் இளையபிராட்டி குந்தவைதேவி.

**25 ஆம் அத்தியாயம்**
**அநிருத்தரின் குற்றம்**

முதன்மந்திரி தம் அரண்மனை ஆசார வாசலில் காத்திருந்தவர்களைப் பார்த்துப் பேசி அனுப்பிவிட்டு விரைவிலேயே திரும்பி வந்தார்.

"அம்மணி! ஏதோ என்னால் முடிந்த வரைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். புயலினால் நேர்ந்த சேதங்களை அறிந்து வர நாலா பக்கமும் ஆட்களை அனுப்பியிருக்கிறேன். சின்னப் பழுவேட்டரையருக்கும் சொல்லி அனுப்பியிருக்கிறேன்; நம் இருவரின் பொறுப்பிலும் பொக்கிஷசாலையைத் திறந்து விடவேண்டும் என்று."

"ஐயா! பெரிய பழுவேட்டரையரின் மாளிகையையொட்டி நிலவறைப் பொக்கிஷம் ஒன்று இருக்கிறதாமே! அதில் கணக்கில்லாத பொருட்கள் குவிந்து இருப்பது உண்மையா? பெரிய பிராட்டி ஒரு தடவை சொன்னார்கள்."

"அதைத் திறந்தால் அதிலுள்ள பொருளைக் கொண்டு ஆயிரம் பெரிய கோவில்கள் புதியதாய்க் கட்டலாமே என்று அந்த அம்மாளுக்கு எண்ணம். நான் கூட அந்த நிலவறைக்குள் போனதில்லை அம்மா! அதற்குள் ஒரு தடவை போகிறவர்கள் உயிரோடு திரும்புவதில்லை" என்றார் முதன்மந்திரி.

"அது போகட்டும், ஐயா! அந்த ஊமைத் தாயை இவர்கள் அழைத்துக் கொண்டு வந்துவிடுவார்களா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய்விடுமோ என்று எனக்குக் கவலையாயிருக்கிறது" என்றாள் குந்தவை.

"தாயே! அந்த மாதரசியைப் பற்றித் தங்களுக்கு என்ன தெரியும்? எப்படித் தெரிந்தது? தாங்கள் ஏன் அவளைப் பற்றி இவ்வளவு பரபரப்பு அடைந்திருக்கிறீர்கள்?" என்றார் அநிருத்தர்.

"ஐயா! சில தினங்களுக்கு முன்பு சக்கரவர்த்தியே என்னிடம் அந்த மாதரசியைப் பற்றிச் சொன்னார்."

"என்ன? அவள் உயிரோடிருப்பதாகச் சொன்னாரா, என்ன?" இல்லை, ஐயா! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னார். அவள் இறந்து போய்விட்டதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறார். அதனாலே தான் அவருடைய சித்தம் கலங்கிப் போயிருக்கிறது. அந்த ஊமைத்தாய் கடலில் விழுந்து இறந்து போய் விட்டதாகத் தாங்கள் தானே தெரிந்து கொண்டு வந்து என் தந்தையிடத்தில் சொன்னீர்களாம்? பின், அந்த மாதரசி உயிரோடிருக்கும் செய்தி தங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"தங்களை அதே கேள்வி கேட்கவேண்டும் என்று எண்ணினேன். தங்களுக்கு எப்படித் தெரிந்தது, தேவி?"

"அதற்கென்ன, சொல்கிறேன் வாணர்குலத்து வீரர் ஈழத்துக்குப் போய்த் திரும்பி வந்தாரே, அவர் முதலில் சொன்னார். பிறகு என் தம்பி அருள்மொழி" என்று கூறிவிட்டு, குந்தவை தன் தவறைத் தானே உணர்ந்தவள் போல் வாயைக் கையினால் பொத்திக் கொண்டாள்.

"தேவி! இளவரசர் அருள் மொழிவர்மரைப்பற்றித் தாங்கள் என்னிடம் சொல்ல விரும்பவில்லையென்றால், சொல்ல வேண்டாம். தாங்கள் அந்தப் பெயரைக் குறிப்பிட்டதை நான் அடியோடு மறந்துவிடுகிறேன்."

"இல்லை, ஐயா! தங்களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடுவது என்ற எண்ணத்துடனேயே வந்தேன். விடயங்களை மூடி மறைத்து வைப்பதினால் தீமை தானே தவிர, நன்மை ஒன்றுமில்லை என்பதைக் கண்டு கொண்டேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பூக்களுக்கும் போட்டி உண்டு



குழந்தைகளே நீங்கள் பூங்காவிற்கு சென்றிருக்கிறீர்களா? அங்கு விதம் விதமான மலர்களை பார்த்திருப்பீர்கள். அவைகள் ஒவ்வொன்றும் பார்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றன.

நீங்கள் அதை பார்த்து இரசித்திருப்பீர்கள். அப்பொழுது அங்குள்ளதிலேயே எந்த பூ அழகு என்று பேசிக் கொண்டிருப்பீர்களா? கண்டிப்பாக செய்திருப்பீர்கள்.

இப்படித்தான் ஒரு நாள் குழந்தைகள் கூட்டம் ஒன்று பூங்காவை சுற்றிப்பார்க்க வந்தது. அங்குள்ள மலர்களை பார்த்து ஒரே சந்தோச கூச்சலிட்டன.

மலர்களுக்கும் குழந்தைகளை பார்த்தவுடன் மகிழ்ச்சி தாங்கவில்லை. என்னைப் பார் என்னைப்பார். என்று காற்றில் தலை சாய்த்து தன் மகிழ்ச்சியை தெரியப்படுத்தின.எல்லாம் பார்த்து விட்டு செல்லும் போது ஒரு குழந்தை எனக்கு ரோஜா பூக்கள் தான் பிடித்திருக்கிறது என்று சொல்லிவிட்டு சென்றது.

இதைக் கேட்டவுடன் மற்ற பூக்களுக்கு வருத்தம் வந்து விட்டது. ரோஜா பூவுக்கோ மகிழ்ச்சி தாங்கவில்லை. பார்த்தீர்களா உங்களிலேயே நான் எவ்வளவு அழகானவன் என்று தெரிந்து கொண்டீர்களா? என்று மற்ற மலர் களை பார்த்து கேட்டது. மற்ற பூக்கள் தலை குனிந்து கொண்டன.

மறு நாள் இதே போல மற்றொரு குழந்தைகள் கூட்டம் ஒன்று அந்தப் பூங்காவைச் சுற்றிப்பார்க்க வந்தன. அவைகளும் அங்குள்ள மலர்களைக் கண்டு கழித்து விட்டு இங்குள்ள பூக்களிலே மல்லிகைப் பூக்கள் தான் அழகாக இருக்கின்றன.

என்று சொல்லிவிட்டு சென்று விட்டனர். இதைக் கேட்டதும் மல்லிகைக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ரோஜா தலை குனிந்து கொண்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்போதில்லையேல் எப்போதும் இல்லை" எனும் மந்திரச் சொல்லை சதா நினைவில் வையுங்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்திய உப ஜனாதிபதியாக எங்கள் தமிழ் உறவு

இந்திய தேசத்தின் உப ஜனாதிபதியாக தமிழகத்தைச் சேர்ந்த சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் உப ஜனாதிபதியாக அவரது பெயரை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முன்மொழிந்திருந்தார்.

உப ஜனாதிபதிக்கான தெரிவில் சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்கள் வெற்றி வெற்று கடந்த 12ஆம் திகதி இந்தியக் குடியரசின் உப ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார்.

பாரத பூமியின் உப ஜனாதிபதியாக ஒரு தமிழர் பதவி வகிப்பது கண்டு நாம் பெருமையடையாமல் இருக்க முடியாது.

தவிர, உப ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த பெருந்தகை.

எங்கள் விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்திலும் அவர் உரையாற்றியிருந்தார்.

ஆக, ஈழத் தமிழ் மக்களின் நிலையை நன்குணர்ந்த – ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த எங்கள் தமிழகத்தின் உடன் பிறப்பு, இந்தியக் குடியரசின் உப ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதென்பது எங்களுக்கான பலம் எனலாம்.

பொதுவில் எங்கள் விவகாரம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மிகுந்த கருசனையோடு உள்ளார்.

இலங்கைக்கும் தொடர்ந்து யழ்ப்பாணத்துக்கும் வருகை தந்திருந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இங்கு உரையாற்றும்போது; இந்தியாவை நம்புங்கள். இந்தியா நிச்சயம் உங்களைப் பாதுகாக்கும் எனக் கூறியிருந்தார்.

அதற்கும் மேலாக, தமிழ் அரசியல் தலைவர்களை இந்தியாவுக்கு வாருங்கள் என அழைத்திருந்தார்.

எனினும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் அழைப்பை நம்மவர்கள் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது தான் உண்மை.

என்ன செய்வது எங்களுக்குள் ஏகப்பட்ட முரண்பாடுகள். இதன் காரணமாக எமக்குக் கிடைத்த பல்வேறு சந்தர்ப்பங்கள் வேரில் பழுத்த பலா போல கோரிக்கையற்றுப் போயின.

ஆனாலும் ஓர் உண்மையை நம் தமிழ் அரசியல்வாதிகள் மறந்துவிடக்கூடாது.

அதாவது, எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதாக இருந்தால், அது இந்தியாவால் மட்டுமே சாத்தியமாகும்.

அதிலும் உலகத் தலைவர்களின் உயர்மதிப்பை பெற்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பதவிக் காலத்தில் எங்களின் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக் கொள்வதுதான் புத்திசாலித்தனமானது.

எனினும் இந்த உண்மையை நம்மவர்கள் உணர மறுப்பது எங்களுக்கான தீர்வை இல்லாது செய்யுமேயன்றி, வேறு எந்தவகையிலும் அது எமக்குச் சாதகமாக அமையாது.

ஆக, ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நினைப்பைக் கொண்ட பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இந்திய உப ஜனாதிபதி சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்களும் பலம் பெற்று இருக்கும் இவ்வேளையில், நாம் அந்த அரிய – பெரிய வாய்ப்பை தக்க முறையில் பயன்படுத்தி எங்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.

## பிரதியமைச்சர்களால் பிரயோசனம் இல்லை

### அதிருப்தியில் தயாசிறி

அநுர அரசின் பிரதி அமைச்சர்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டாம் என அரச ஊழியர்களைக் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், பணியாளர்களுக்கான கொடுப்பனவு போன்ற சலுகைகளைப் பயன்படுத்தியமைக்காக பிரதி அமைச்சர்களுக்கு எதிராக, பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆலோசித்து வருகின்றது.

பிரதி அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறமாட்டார்கள் என்று சபாநாயகர் இந்த வாரம் தெளிவாகக் கூறினார். எனவே, அவர்களை சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கருத வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் அவர்கள் சலுகைகளைக் கோர முடியாது. அதன்படி பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து நாங்கள் ஆலோசித்து வருகிறோம் என்றார். (ந-7)

## இரட்டைக் கொலை சந்தேக நபர் கைது

இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் கரந்தெனியப் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கொட்டவிலப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டபோது, அவரிடமிருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கரந்தெனிய, கொட்டவிலப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவரெனவும் கடந்த 11 ஆம் திகதி கரந்தெனியப் பொலிஸ் பிரிவின் கபுலகொடப் பகுதியில் ஒரு பெண் மற்றும் ஒரு ஆணைத் தாக்கிக் கொலை செய்த குற்றத்தில் சந்தேக நபர் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கரந்தெனியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த மஞ்சள் மூடைகள் தமிழகத்தில் பறிமுதல்

சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பெருந்தொகை மஞ்சள், மண்டபம் வேதாரணியம் கடற்கரையில் உள்ள வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் தமிழகக் கடலோரப் பாதுகாப்புப் படையினரால் நேற்று (14) கைப்பற்றப்பட்டுள்ளது.

40 கிலோ எடை கொண்ட 40 மூடைகளில் கைப்பற்றப்பட்ட மஞ்சள் ஆயிரத்து 600 கிலோகிராம் எடையுடையது என்பதுடன் அதன் பெறுமதி சுமார் 2.14 இலட்சம் இந்திய ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் சமீப காலமாக கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் கடல் அட்டை, கஞ்சா, மஞ்சள், சுக்கு, பீடி இலை, வெளிநாட்டு சிகரெட் உள்ளிட்டவைகள் அதிகளவில் இலங்கைக்குக் கடத்தப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் இதனைத் தடுப்பதற்காக இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லையில் இலங்கை இந்திய கடற்படை மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படை தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறது. (ந-7)

## யாழில் ஹெரோயினுடன் இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநகர்ப் பகுதியில் ஹெரோயினுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் திருநகர்ப் பகுதியில், மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 539 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயது உடையவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ள நிலையில்,

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,33)

## கொட்டித் தீர்த்த கனமழையால் வெங்காயச் செய்கை அழிவு

### குடத்தனையில் பாதிப்பு

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக, அறுவடை செய்யப்பட்ட வெங்காயம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தற்போது வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் வெங்காய அறுவடை நடைபெற்று வரும் நிலையில் கடந்த சில தினங்களாகக் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக வெள்ளம் தேங்கி நிற்பதாலும் அறுவடை செய்த வெங்காயங்களை உலர விட முடியாததாலும் விவசாயிகள் பெரும் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னரும் கொட்டித்தீர்த்த கனமழை காரணமாக படகின் மூலம் வெங்காயங்களை விவசாயிகள் ஏற்றி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7,60)

## பொலிஸ் அதிகாரிகள் மூவருக்கு ஏழாண்டு கடூழியச் சிறை

பொலநறுவையில் 2004ஆம் ஆண்டு ஹோட்டல் முகாமையாளர் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மூன்று பொலிஸாருக்கு பொலநறுவை மேல் நீதிமன்ற நீதிபதி ஏழு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

2004இல் பொலநறுவை மாவட்டப் போதை ஒழிப்புப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த நான்கு பொலிஸார், பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தலைமையில், சட்ட விரோத மதுபானம் தேடி ஹோட்டல் ஒன்றில் சோதனை நடத்தினர்.

இதன் போது ஹோட்டல் முகாமையாளருக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு பொலிஸார் அவரைத் தாக்கியதில் முகாமையாளர் உயிரிழந்தார்.

இதையடுத்து நான்கு பொலிஸாரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர், அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணை பொலநறுவை மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் பொலிஸ் பரிசோதகர் வசந்த நோய் காரணமாக உயிரிழந்தார்.

எஞ்சிய மூன்று பொலிஸாருக்கு 2025 ஜனவரியில் மீண்டும் பணி வழங்கப்பட்டு அவர்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெகத் பிரியந்த மட்டக்களப்புப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கும் மற்றைய இருவர் வேறு மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கும் இடமாற்றப்பட்டிருந்தனர்.

இவ்வாறான பின்னணியிலேயே மேல் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சாட்சிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அவர்கள் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டு ஏழு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரழிவுகளும் நில நடுக்கமும் குறித்த ஒரு பார்வை

05

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

உலகின் நிலநடுக்கங்கள் (90% முதல் 81% வரையான பெரிய நிலநடுக்கங்கள். அடிக்கடி பசிபிக் பெருங்கடலைச் சுற்றி அமைந்துள்ள எரிமலை வளையம் என்ற பகுதியில் அமைந்துள்ளன. இமய மலையின் அடிவாரத்திலும் அதிக அளவு நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிலநடுக்க பாதிப்பு (seismic risk) அதிகம் உள்ள இடங்களில் மெக்சிகோ நகரம், டோக்கியோ மற்றும் தெஹ்ரான் போன்ற பெரு நகரங்களின் தோற்றமும் வளர்ச்சியால், ஒரே நிலநடுக்கத்தில் 3 மில்லியன் மக்கள் கொல்லப்பட வாய்ப்புள்ளதாக அறிஞர்கள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கங்கள் தொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் கற்கைப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன கீழ்வருமாறு கூறுகிறார்.

"பூமியின் உட்பகுதியில் உள்ள விரிசல்களினால் ஏற்படும் சிறு அசைவுகளினால் ஏற்படும் அதிர்வுகளே இதற்குக் காரணம். இலங்கை வருடத்திற்கு 1 அல்லது 2 மில்லி மீற்றர்கள் என்ற விகிதத்தில் மிக மெதுவாக உயர்வடைகின்றது. இடத்துக்கு இடம் உயரும் அளவு மாறுபடும். ஆனால் நிலத்தடி செயற்பாடு அதிகமாக இருக்கும் பல இடங்கள் உள்ளன, குறிப்பாக பூமியின் மேலோட்டத்தில். அந்த இடங்களை அடையாளம் காண்பது மிகவும் எளிது. அவற்றில் உள்ள கனிம வளங்களின் அடிப்படையில். உண்மையில், இந்த பகுதிகள் கனிம வளங்கள் நிறைந்தவை. எனவே, இந்த நில உயர்வால், இந்த சிறிய அதிர்வுகள் ஏற்படுகின்றன." என்றார்.

## 2004 இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கமும் சுனாமி (ஆழிப்பேரலை) யும்

பெரும்பாலான சுனாமிகள் பூகம்பத்தினால் ஏற்படுகின்றன. ஆனால் எல்லாப் பூகம்பங்களினாலும் சுனாமியை ஏற்படுத்த முடியாது. 7.0 ரிக்டர் அளவை விட அதிக அளவுள்ள பூகம்பங்கள் சுனாமியை ஏற்படுத்தக்கூடியன. ஆனாலும் கடலில் ஏற்படும் 7.0 ரிச்டர் அளவுக்கு அதிகமான எல்லாப் பூகம்பங்களும் சுனாமியை ஏற்படுத்தக்கூடியன அல்ல.



2004 இந்தியப் பெருங்கடல் நிலநடுக்கம், 26, டிசம்பர் 2004இல் சுமத் திரா தீவின் வடமேற்கு கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட 150 கி.மீ. தூரத்தில் ஆழ்கடலில் நிகழ்ந்த நிலநடுக்கம் ஆகும். 9.3 புள்ளிகள் ரிக்டர் அளவில் வாய்ந்த நிலநடுக்கம் வரலாற்றில் நிலநடுக்கப் பதிவுக் கருவியில் ரிக்டர் அளவு எடுத்த நிலநடுக்கங்களில் இரண்டாம் மிக வலிமையான நிலநடுக்கம் ஆகும். இந்த நிலநடுக்கம் காரணமாக எழுந்த ஆழிப் பேரலை தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, இந்தியா, மாலைதீவுகள் ஆகிய நாடுகளைத் தாக்கியதில் 14 நாடுகளைச் சேர்ந்த 230,000 பேர் உயிரிழந்தனர்.

சுனாமியினால் இலங்கையில் பல தாக்கங்கள் ஏற்பட்டாலும் அவற்றில் முதலிடம் பெறுவதும் எம் கண்களை ஒரு கணம் கலங்க வைப்பதும் இறப்பு பற்றியது மாகும். இலங்கையை அண்மித்த சுனாமி பேரலையானது கடற்கரையில் இருந்து சுமார் 1கி.மீ வரை உள்நகர்ந்தது. இவ் இயற்கை அனர்த்தம் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. அத்துடன் காலை வேளையில் இது இலங்கையை தாக்கியமையால் அதிகமானோர் இறப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. பெரும்பாலும் உயிரிழந்தவர்களில் பெண்களும் குழந்தைகளும் அதிகமானோர். இந்த சுனாமி கரையோர மாவட்டங்கள் ஒன்றையேனும் விட்டு வைக்கவில்லை.

உலகின் பல பாகங்களிலும் சுனாமி அலைகள் அடிக்கடி ஏற்படுகின்ற போதும் 2004இல் இலங்கைக்கு ஏற்பட்ட சுனாமி புதியதொரு விடயமாக இருந்தது. சுனாமி பற்றிய போதிய விளக்க[illegible] இராட்சத அலைகள் தாக்கிய போது எவ்வித தற்காப்பு நடவடிக் கையுமின்றி சொல்லிலடங்கா தாக்கங்களை தன தாக்கிக் கொண்டது.

நிலநடுக்கம் வருவதை பறவைகள், விலங்குகளால் அதனை அறிய முடிகிறது.

நிலநடுக்கம் வருவதை மனிதர்களாகிய நம்மால் அறிய முடிவதில்லை, விஞ்ஞானிகள் கூட அதனை கண்டறிய பலவகையான தொழிநுட்ப சாதனங்களைப் பயன்படுத்திதான் தோராயிரமாக அறிகின்றன. 6 அறிவு கொண்ட மனிதர்கள் அறியமுடியாத விடயத்தை. 5 அறிவு கொண்ட பறவைகள், விலங்குகளால் அதனை அறிய முடிகிறது.

விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு இருப்பது ஐந்து அறிவு தான் என்று நாம் குறைத்து எடைபோடுகிறோம். ஆனால் அந்த ஐந்து அறிவுதான் விலங்குகள் பறவைகளுக்கு மிகவும் உணர்வுத் தன்மையான ஒன்று. அந்த உணர் சக்தியை பயன்படுத்தி இயற்கை சீற்றங்களை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் திறன் ஐந்தறிவு கொண்ட உயிரினங்களுக்கு இருக்கிறது.

இந்த பூமியில் கிட்டத்தட்ட 15 tectonic plates இருக்கிறது. இந்த Tectonic Plates ஒன்றோடு ஒன்று உரசும்போது நிலநடுக்கம் ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது. ஆக ஒரு நிலநடுக்கம் ஏற்படும் போது சில அதிர்வுகள் பூமியின் மேல் பரப்பை நோக்கி செல்லும். ஆனால் இவ் அதிர்வு பூமியை நோக்கி செல்வதற்கு முன், சில குறைவான அதிர்வுகள் பூமியை நோக்கி மிக வேகமாக செல்லும். இந்த அதிர்வுகள் பூமியை நோக்கி என்னதான் அதிவேகமாக என்றாலும் இதனுடைய சத்தம் 20Hzஇற்கு கீழ் தான் இருக்கும். இதனை மனிதர்களாகிய நம்மால் உணர முடியாது.

மனிதர்களாகிய நமக்கு 20Hz இருந்து 20,000 Hzஇற்கு உள் இருக்கும் சத்தத்தை தான் காதால் கேட்க முடியும். இந்த 20-Hzஇற்கு கீழ் இருக்கும் சத்தத்தை Infrasonic Sounds என்று அழைக்கப்படுகின்றது. இந்த Infrasonic Sound- ஐ விலங்குகள், பறவைகள் என்று ஐந்து அறிவு கொண்ட உயிரினங் களால் உணர முடியும். இந்த இயற்கை சீற்றங்கள் நடைபெற இருக்கும் போது புவிகாந்த விசையில் சில மாற்றங்கள் நிகழுமாம். அத்தனையும் சில விலங்குகள் மற்றும் பறவைகளால் உணர முடியுமாம்.

அதேபோல் இயற்கை சீற்றம் நிகழும் போது கடலிலும் சில அழுத்தங்கள் ஏற்படும். அதனை அந்த கடலில் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிரினங்களால் உணர முடியும், ஆக கடலில் இருக்கும் உயிரினங்களும் அங்கு ஆபத்து இருப்பதை உணர்ந்து பாது காப்பான இடத்திற்கு சென்றுவிடுமாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடளாவிய...

தொடர்பான குற்றங்கள் தொடர்பாகவும் மொத்தம் 631 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக 25 ஆயிரத்து 774 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 22 நபர்களைப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

மேலும் பிடியாணை உத்தரவு நிலுவையில் உள்ள 332 நபர்கள் இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அறிக்கையின்படி மொத்தம் 36 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்தியதற்காக கைது செய்யப்பட்டனர்.

மேலும் பொறுப்பற்ற சாரதிகள் 21 பேர் மற்றும் பல்வேறு போக்குவரத்து குற்றங்களை மீறிய 3 ஆயிரத்து 673 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களைக் கைது செய்ய நாடு முழுவதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ந-7)

## ஐ.நா பொதுச்...

நடத்தவுள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அமெரிக்க விஜயத்தையடுத்து ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுர இம்மாதம் 26ஆம் திகதி ஜப்பானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பெக்கோ சமனின்...

39 வயதான குறித்த சந்தேகநபரை தங்காலை குற்றவியல் பிரிவின் அதிகாரிகள் சூரியவெவவில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் கைது செய்யப்பட்ட வேளை அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றும் 40 தோட்டாக்களும் 250 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர் சூரியவெவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின் அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை நேற்றுமுன்தினமும் (13) பெக்கோ சமனின் நெருங்கிய கூட்டாளி ஒருவர் எம்பிலிப்பிட்டிய பகுதியில் வைத்து துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மாகாண சபைத்...

அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறித்த வினாவைத் தொடுத்துள்ளார்.

இது தொடர்பில் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் குறிப்பிடுகையில்,

இந்த அரசாங்கம் ஊடகப் பிரசாரங்கள் மூலம் முன்னோக்கிச் செல்ல முயற்சிக்கிறது. தேசிய மக்கள் கட்சி ஆட்சியேற்று ஓராண்டு நிறைவடைகிறது.

தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் அரசாங்கம் எதனை நடைமுறைப்படுத்தியுள்ளது? வாக்குறுதிகளை ஒருபுறம் வைத்துவிட்டு, ஊடகப் பிரசாரங்களை முன்னெடுப்பதிலேயே அரசாங்கம் அவதானம் செலுத்தி வருகிறது. அவற்றைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை அரசியல் பழிவாங்கல்களுக்கும் உட்படுத்துகிறது.

ஜனாதிபதித் தேர்தலின்போது மின் கட்டணம் தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க மிக அழகான கதைகளை மக்களிடம் கூறினார். மின் கட்டணங்களை மூன்றில் இரண்டு மடங்கால் குறைக்க முடியும் எனக் கூறினார். தனது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே அதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனக் கூறினார். ஆனால் இன்று ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர அவர் கூறியபடி குறைக்கப்படவில்லை.

அத்தோடு அண்மையில் மூன்றாவது முறையாக மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியைப் போன்று இதற்கு முன்னர் எந்தவொரு அரசாங்கமும் மக்களை ஏமாற்றவில்லை. அதேபோன்றுதான் மாகாணசபைத் தேர்தல் விடயத்திலும் அரசாங்கம் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. மேலும் தாமதப்படுத்தாது வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

கடந்த அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கமும் மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்த முயற்சித்தால் அது தவறாகும்.

மாகாண சபை என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டியவையாகும். எனவே ஆளுநர்கள் தொடர்ந்தும் ஆட்சி செய்ய அனுமதிக்க முடியாது.

அவசர நிலைமைகளில் அவ்வாறு செய்ய முடியும். ஆனால் வருடக் கணக்கில் ஆளுநர் ஆட்சிக்கு இடமளிப்பது தவறாகும்.

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக நாம் அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என்றார். (ந-7)

## சிறி...

துக்கு அருகில் கார் ஒன்றுடன் நேற்றுப் பிற்பகல் விபத்துக்குள்ளானதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த அவர் நோயாளர் காவு வண்டியின் மூலமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ந-7)

## கற்...

வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் எட்டு நபர்கள் ஈடுபட்டமை அடையாளம் காணப்பட்டு அவர்களில் நான்கு பேரைக் கைது செய்த பொலிஸார் விசாரணைகளின் பின் பருத்தித்துறை நீதவான் முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து குறித்த நான்கு பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்ய பருத்தித்துறைப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கற்கோவளம் பகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தலை நிறுத்தக் கோரியவர்கள் மீது மணல் கடத்தலில் ஈடுபட்டுவரும் தரப்பினரால் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இதன்போது அங்கிருந்த இரண்டு மீனவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,60)


மஹஜன சம்பத — திகதி 2025.09.14 — சீட்டிழுப்பு இலக்கம் 5952 — U 2 1 9 1 4 8
அத சம்பத — U 9 1 4 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0527
National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.09.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0068 — தனுசு 10 21 44 49

தன நிதானய — திகதி - 2025.09.14 — சீட்டிழுப்பு இலக்கம் - 1982 — E 15 46 54 66 E

மெகா பவர் — திகதி 14/09/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2300 — A 20 25 32 40 67

ஜய — திகதி 2025.09.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0220 — H 5 4 2 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4194 — சீட்டிழுப்பு திகதி 14.09.2025 — F 40 73 76 80 — F

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.09.14 — சீட்டிழுப்பு இலக்கம் 1261 — மீனம் 05 09 12 34 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 14.09.2025 — வெற்றி வாரம் 0660 — F 7 0 1 6 3 8 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,215,964.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2926 — சீட்டிழுப்பு திகதி 2025.09.14 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 14 21 29 33 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,631,644.00 — DLB

சனிதா — திகதி 14.09.2025 — வெற்றி வாரம் 5087 — 25 65 71 78 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,707,732.80 — DLB

சசிரி — வெற்றி வாரம் 0770 — சீட்டிழுப்பு திகதி 14.09.2025 — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 26 32 42 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4638 — சீட்டிழுப்பு திகதி 14.09.2025 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 05 13 29 47 ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,620,704.80 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — I 12 09 30 43 59 — 2102 — 14.09.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.593,900,822.80 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் : 2752 — சீட்டிழுப்பு திகதி : 2025.09.14 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,646,595.20 — 22 34 63 73 G — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3881)

076 825 7716 (ஆகாஸ்)

## காயத்திரி திருமண சேவை

1) மணமக்கள் தேவை
2) காண்டம் பார்த்தல்
3)அலுவலக உதவியாளர் வயது 40இற்கு மேல்
4) சகலவித சமையல் தெரிந்தவர்கள் (தங்குமிட வசதியுடன் யாழ்ப்பாணம்)

தொடர்புகட்கு :
076 314 4689 (5422)

## மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, Doctor பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
02.பருத்தித்துறை - அல்வாய், 1996, இந்து, அவிட்டம், Bsc, Msc, Norway பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
03.இருபாலை, 1993, இந்து, திருவோணம், Masters, Germany citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
04.புங்குடுதீவு, 1997, இந்து, அவிட்டம், Bsc, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
05.தம்பசிட்டி, 1998, இந்து, மகம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
06.திருநெல்வேலி - புங்குடுதீவு, இந்து, 1996, ரோகிணி, Civil Engineer, Canada பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
07.அளவெட்டி, 1997, இந்து, மூலம், Bachelors, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
8.மானிப்பாய், 1993, இந்து, ஆயிலியம், MBBS, Doctor, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
9.சாவகச்சேரி, 1990, இந்து, உத்திரட்டாதி, Graduate, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
10.காரைநகர், 1992, இந்து, மிருகசீரிடம், Masters, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (5420)

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


## தியாக தீபம்...

யாழ்ப்பாணத்தில் தியாகதீபம் உண்ணாநோன்பை ஆரம்பித்த நல்லூர் வடக்கு வீதியில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, அதனைத் தொடர்ந்து நினைவுத் தூபியில் அஞ்சலியுடன் முதலாம் நாள் நிகழ்வு ஆரம்பமாகும்.

காலை 9.45 மணிக்கு மாவீரர்களின் பெற்றோரால் ஈகச்சுடர் ஏற்றப்படும்.

தினமும் காலையில் 8.00 மணிக்கு நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

20ஆம் 21ஆம் திகதிகளில் நல்லூர் நினைவுத் தூபி அருகில் ஓவியப் போட்டிகளும் 21.09.2025 அன்று நல்லூர் நினைவுத் தூபியில் இரத்த தானமும் நடைபெறும்.

இறுதிநாள் நிகழ்வுகள் நல்லூரில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி 10.48க்கு ஈகச்சுடர் ஏற்றப்படும் என தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ந-7,33)

## ரணிலை...

றுள்ளது.

இக் கலந்துரையாடலில் உலக அரசியல் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டதுடன் நேபாளத்தில் தற்போதைய அரசியல் ஸ்திரமின்மை குறித்து தனது நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க இந்திய உயர் ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்திய உயர் ஸ்தானிகருக்கும் இடையிலான கலந்துரையாடல் குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் புதுடெல்லிக்கு அறிக்கையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணிலை சீனத் தூதுவர் நேற்று முன்தினம் சந்தித்திருந்தமை தெரிந்ததே. (ந-7)

## பழைய...

ணய செயல்முறை முடிவடைந்த பின்னரே தேர்தல் நடத்தப்படும் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

எனினும் இந்தியா உட்பட்ட தரப்புக்களில் இருந்து அரசாங்கத்துக்கு அழுத்தம் அதிகரித்து வரும் நிலையில், இந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## படையினரை...

இந்நிலையில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர கூறியதற்குப் பதிலளித்த ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் பொதுச் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருணஜய சேகரவிடம் விசாரணை நடத்தினால் யுத்தக் குற்றங்களில் அவரது பங்கு எப்படி இருந்தது என்பது தெரியவரும்.

செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் பாதுகாப்பு வலயங்கள் மீது மோட்டார் குண்டுத் தாக்குதல்கள் உள்ளிட்டவை யுத்தக் குற்றங்கள் ஆகும்.

எனினும் அருண ஜயசேகர, முன்னாள் இராணுவ வீரர் என்பதால் முப்படைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அவர் இவ்வாறு பேசுகிறார். எனவேதான் உள்ளக விசாரணைகள் மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்கிறோம்.

இலங்கை அரசாங்கங்கள் முப்படைகளைப் பாதுகாக்கவே முயல்கின்றன. இதனால் தமிழ் மக்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது. சர்வதேச விசாரணை மூலமே உண்மைகளை நிரூபிக்க முடியும். உள்ளக விசாரணைகளில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. இதனால் சர்வதேச விசாரணை அவசியம் என்றார்.

இலங்கையில் எவ்விதமான போர்க் குற்றங்களும் இடம்பெறவில்லை எனும், பிரதி அமைச்சரின் கூற்றை வன்மையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. இதுகுறித்து கருத்துரைத்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ், இலங்கையில் நடைபெற்றது போர்க் குற்றத்தையும் தாண்டிய இனப் படுகொலை. எனவே இதற்கு முற்று முழுதான சர்வதேச விசாரணைதான் தீர்வாக அமைய முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ந-7)


## வேலைவாய்ப்பு

PRIME VET CARE Veterinary Hospital
விலங்கு மருத்துவ நிலையம்

கோண்டாவிலில் இயங்கிவரும் எமது தனியார் கால்நடை வைத்திய நிலையத்திற்கு (PRIME VET CARE) பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை..

மேலதிக தகவல்களிற்கு :
077 074 3671, 075 709 7497 (5426)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3879)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-3879)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 – 8 தமிழ் மொழியும்
தரம் 6 – 11 வரலாறு, புவியியல்

பாடங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். பிரபல பாடசாலை ஆசிரியர் (5413)

072 212 6973

## வேலையாள் தேவை

நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமித் தோட்டத்திற்கும் பசு பராமரிப்பிற்கும் முன் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்குமிடம் வழங்கப்படும். (C-3878)

077 844 8796
075 629 0850

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் ரெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 22 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக (5425)

தொடர்புகளுக்கு : விமல் 076 755 8606
074 338 4481 / 077 638 5683

## உடனடி வேலைவாய்ப்பு

யாழில் முன்னணி திருமண சேவை நிறுவனமொன்றிற்கு பின்வரும் வேலைக்குப் பெண்கள் மட்டும் தேவை.

- Assistant Manager
- Costermer Care

தகுதி : A/L சித்தி

Marketing அறிவுடையவர்கள், கணனி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது
அடிப்படைச்சம்பளம் : 40 000 – 45 000 + மேலதிகக் கொடுப்பனவுகள் (5427)

076 627 2742, 077 335 3461

## காணி விற்பனைக்கு

பாரதி சனசமூக நிலையம் முன்வீதி (வலது புறத்தில் முதலாவது வீடு) உயரப்புலம் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் வீட்டுடன் 06 பரப்பு (நிலப்பரப்பு) காணியும் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு :
Whatsapp No : +94 770 460 604 (1545)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.